[26th February 1969

தமிழ்ப் பண்டிதர்களுக்குரிய சம்பள விதத்தில் சம்பளம் பெறும் தமிழ் பண்டிதர்களாக நியமிக்கப்படத் தகுதியுள்ளவர்களா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஆம்.

Sethusamudram Project Report

* 56 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the project report of the Special Engineering Experts on the Sethusamudram Project has been received by the Government of Tamil Nadu from the Central Government; and

(*b*) the estimated cost thereof?

சேதுசமுத்திர திட்டம் பற்றிய அறிக்கை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேதுசமுத்திர திட்டத்தைப் பற்றிய விசேஷ பொறியியல் வல்லுனரின் திட்ட அறிக்கை மத்திய அரசிடமிருந்து தமிழக அரசினால் பெறப்பட்டதா?

(இ) அதில் எவ்வளவு செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) இந்திய அரசின் சேதுசமுத்திரத் திட்ட ஆலோசனைப் பொறியாளரிடமிருந்து சேதுசமுத்திர திட்டம் குறித்து சுற்றறிக்கை கிடைத்துள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு ரூ. 37.50 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ராமநாதபுரத்திற்கு அருகே தோண்டினால் அதிகம் செலவாகும் என்பதால் அதற்குப் பதிலாக ராமேஸ்வரத்திற்கு அருகே அதைச் செய்தால் செலவு குறையும் என்று கூறப்பட்டதே, இந்த 35 கோடி எந்தத் திட்டத்தைச் சேர்ந்தது? மத்திய அரசாங்கம் என்ன சொல்லியது? நம் அரசாங்கம் என்ன சொல்கிறது? எப்போது அது அமுலுக்கு வரும் என்று அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ராமேஸ்வரம் பக்கத்தில் அமைக்கிற திட்டத்திற்கு 37.50 கோடி ஆகிறது. மண்டபம் கால்வாய்க்கு பக்கம் அமைக்க ரூ. 57.60 கோடியாகிறது. ராமேஸ்வரம் பக்கத்தில் அமைக்கிற திட்டத்தை இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.